# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

No 17A, Pedris Road, Colombo 3, Tel: **011 3010662-4**, Fax: **011 2577117**
**E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org


**நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2015**

**தேர்தல் தின ஊடக அறிக்கை 02**

வன்முறைகள், முறைகேடுகள் பற்றி அறிக்கைகள் இருந்த போதிலும், இந்தப் பொதுத் தேர்தலில் வாக்களிப்பானது பெரிதும் அமைதியானதாகவும் மற்றும் இடையூறுகள் அற்றதாகவும் இருந்தது. குறிப்பாக இம்முறை பொலிசார் தேர்தல் முறைமையின் நம்பகத்தன்மையைப் பாதுகாப்பதில் விழிப்பாக இருந்ததுடன் தேர்தல் சட்டங்களின் மீறுதல்களுக்காக 50 பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

கீழேயுள்ள வரைபு, கடந்த மூன்று தேசிய தேர்தல்களினதும் மற்றும் இந்தத் தேர்தலின் தேர்தல் தினத்தன்றான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் முறைகேடுகள் என்பவற்றுக்கிடையிலான ஒரு ஒப்பீட்டைக் காட்டுகின்றது.



வாக்களிப்பின் முடிவில், தே.வ.க.நி மொத்தமாக 316 சம்பவங்களைப் பதிவு செய்தது. இவற்றுள், 109 பாரதூரமான சம்பவங்களாக வகைப்படுத்தப்படுகையில், 196 சிறிய சம்பவங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. பாரதூரமான சம்பவங்களில் அதிக எண்ணிக்கையிலானவை வாக்களிப்பு நிலையங்களை அண்மித்த இடங்களில் அழுத்தங்களை ஏற்படுத்தும் வகையிலாக கட்சி ஆதரவாளர்களின் பிரசன்னம் தொடர்பானவையாக இருந்தன. அச்சுறுத்தல் மற்றும் மிரட்டுதல் தொடர்பான நான்கு (4) சம்பவங்கள் முறையே கண்டியில் பாத்ததும்பர, அநுராதபுரவில் மதவாச்சி, யாழ்ப்பாணத்தில் கோப்பாய் மற்றும் இரத்தினபுரியில் எகலியகொட ஆகிய இடங்களில் அறிவிக்கப்பட்டதுடன் கண்டி மாவட்டத்தின் நாவலப்பிட்டியவிலிருந்து ஒரு (1) தாக்குதல் சம்பவமும் அறிவிக்கப்பட்டது. கீழே சம்பவங்கள் தொடர்பான சுருக்கமான அறிக்கை தரப்பட்டுள்ளது.

**அழுத்தம் தரும் வகையிலான பிரசன்னம்**

வாக்களிப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகளில் கட்சி ஆதரவாளர்களின் பிரசன்னம் தொடர்பான 43 சம்பவங்களை முறையே வடக்கு (10), கிழக்கு (5), வட மேற்கு (5), ஊவா (5), மத்திய (3) மற்றும் மேற்கு (10) மாகாணங்களில் பதிவு செய்தது.

அச்சுறுத்தல் மற்றும் மிரட்டுதல் தொடர்பான 6 சம்பவங்கள் பற்றிய அறிக்கைகளை தே.வ.க.நி கிடைக்கப்பெற்றது.

**நாவலப்பிட்டியவில் தாக்குதல்**

கண்டி, நாவலப்பிட்டித் தேர்தல் தொகுதியில், நாவலப்பிட்டி மத்திய கல்லூரி வாக்களிப்பு நிலையங்கள் 45 மற்றும் 46 இல் பி.ப 2.45 அளவில் ஐ.தே.க வேட்பாளர் திரு. ஆனந்த அளுத்கமகேயினால் பஸ்பாகே கோறளை பிரதேசச் சபையின் முன்னாள் உறுப்பினர் திரு. அநுருத்த அமரசேன என்பவர் தாக்கப்பட்டார். தாக்குதலுக்குள்ளானவர் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவர் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தார். இது வரை கைதுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**தேர்தல் சட்டத்தை மீறியமைக்காக நபர் கைது செய்யப்பட்டார் - கொழும்பு**

கொழும்பு மத்தி, கொழும்பிலுள்ள சரண முஸ்லிம் சங்கம் கட்டிட வாக்களிப்பு நிலையம் 100 இலுள்ள தே.வ.க.நி கண்காணிப்பாளர், ஐக்கிய சமாதான முன்னணியின் வேட்பாளர், தனது வாக்கடையாளமிடப்பட்ட வாக்குச்சீட்டை புகைப்படம் எடுத்ததாக சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய அதிகாரிக்கு முறைப்பாடு செய்தார். மாளிகாவத்தை பொலிசார் திரு.சஜித்தைக் கைது செய்தனர்.

**ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு.தனசிறி அமரத்துங்க மற்றும் ஆதரவாளர்கள் வாக்களிப்பு நிலையத்தைச் சுற்றி காணப்பட்டமை, தெகிவளை, கொழும்பு**

பி.ப 3.40 அளவில், ஐ.ம.சு.கூ வேட்பாளர் தனசிறி அமரத்துங்க மற்றும் அவரது சுமார் 50 ஆதரவாளர்கள் தெகிவளை – பாமன்கடைச் சந்திக்கு அருகிலுள்ள பாமன்கடை சங்கமித்தாக் கல்லூரி வாக்களிப்பு நிலையத்தைச் சுற்றி நின்றமை.

**வாக்காளர் போக்குவரத்து, கம்பஹா**

கம்பஹா மாவட்ட ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு. இந்திக்க அநுருத்தவின் ஆதரவாளர்கள் காலை 11.45 அளவில் அவரது வேட்பாளர் இலக்கம் 21 ஐ தாங்கிய ஒரு வாகனத்தில் வித்தியலோக்கா ஆரம்பப் பாடசாலை வாக்களிப்பு நிலையம் 3 இற்கு வாக்காளர்களுக்குப் போக்குவரத்து ஏற்பாடு செய்தனர்.

**அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல் - கட்டானை, கம்பஹா**

ஐ.ம.சு.கூ மற்றும் கட்டானை நகர சபை முன்னாள் உறுப்பினருமான திரு. அத்தாச்சி அல்லது பாய்யா மற்றும் வெலி துசித்த அல்லது வெலி சுஜி ஆகியோர் காலை 10.55 இலிருந்து பப்புவல, ஜோன் பஸ்தியான் வித்தியாலய வாக்களிப்பு நிலையம் 4 இல் ஐ.ம.சு.கூ இற்கு வாக்களிக்கும்படி வாக்காளர்களை அச்சுறுத்தியாக குற்றஞ் சாட்டப்பட்டது.

**பரப்புரைச் சாதனங்களை விநியோகித்தவர்கள் களுத்துறையில் கைது செய்யப்பட்டனர்**

களுத்துறை நாகரட்னராம சந்தியில், தேர்தல் பரப்புரைச் சாதனங்களை விநியோகித்த ரஜந்த சில்வா மற்றும் ரோஷான் டி சில்வா ஆகிய இரண்டு நபர்களை களுத்துறை கிழக்கு பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் திரு. விக்கிரமாராச்சி உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழு கைது செய்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வேட்பாளர்கள் திரு.ராஜித்த சேனரத்ன மற்றும் திரு. அஜித் பெரெரா ஆகியோர்களின் பரப்புரைச் சாதனங்களை விநியோகித்தனர். கைது செய்யப்பட்ட நேரமான காலை 9.05 அளவில் குற்றமிழைத்தவர்கள் WP/HJ 9312 இலக்கம் கொண்ட ஒரு முச்சக்கர வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தனர். களுத்துறைப் பொலிஸ் நிலையத்தில் (MOIB 76/102) ஒரு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வாக்குச் சீட்டுகளைத் தம் வசம் கொண்டிருந்தமைக்காக நபர் கைது செய்யப்பட்டார், மன்னார் தேர்தல் தொகுதி, வன்னி**

ஐ.தே.க. ஆதரவாளரொருவர் 7 வாக்குச் சீட்டுகளைத் தம் வசம் கொண்டிருந்ததாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது. போலிஸார் அவரை பி.ப 2.30 அளவில் கைது செய்தனர். இது மன்னார்/ கொக்குபடையான் ரோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை வாக்களிப்பு நிலையம் 50, புதுக்குடியிருப்பில் நிகழ்ந்தது.

**பசறை, பதுளையில் வேட்பாளரொருவரினால் வாக்காளர்களுக்கான போக்குவரத்து வழங்கப்பட்டது**

ஐ.ம.சு.கூ வேட்பாளர் இல 6 திரு. சாமர சம்பத், காலை 8.30 அளவில் பசறை, மெதவளகம பிரதேசத்திலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு G5 7519 எனும் இலக்க வாகனத்தில் போக்குவரத்து வசதிகளை வழங்கியதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது.

**செல்லுபடியற்ற தேசிய அடையாள அட்டைகளை உபயோகித்தமை, திருகோணமலை தேர்தல் தொகுதி, திருகோணமலை**

கண்டிய அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் (வாக்களிப்பு நிலையம் 52) செல்லுபடியற்ற தேசிய அடையான அட்டையை உபயோகித்தமை தொடர்பான ஒரு முறைப்பாட்டை தே.வ.க.நி கிடைக்கப்பெற்றது.

**வாக்காளர்களை ஊக்குவிப்பதற்கு மாதிரி வாக்குச் சீட்டின் உபயோகம்- மூதூர், திருகோணமலை**

மூதூர், சிராஜ் நகர் முஸ்லிம் வித்தியாலய வாக்களிப்பு நிலையங்கள் 48 மற்றும் 49 இற்கு அருகில், ஐ.தே.க. வேட்பாளர் திரு. எம். எஸ். தௌபீக்கிற்கு வாக்களிப்பதற்கு அறிவுறுத்துவதற்கு அவரது ஆதரவாளர்களால் மாதிரி வாக்குச்சீட்டு உபயோகிக்கப்பட்டதாக தே.வ.க.நி ஒரு முறைப்பாட்டைப் பெற்றது.

**வாகனச் சாரதி அனுமதிப் பத்திரத்தை உபயோகித்த வாக்காளர் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படாமை, அரநாயக்க, கேகாலை**

திரு.டி.வி ரனசிங்க என்ற பெயருடைய ஒரு வாக்காளர் உசப்பிட்டிய போதிராஜ வித்தியாலய வாக்களிப்பு நிலையம் 2 இல் அனுமதிப் பத்திரம் இரத்தாகிவிட்டது என அறிவித்து அவரது சாரதி அனுமதிப் பத்திரத்தை உபயோகித்து வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், அத்தகையதொரு காலாவதியாகும் தினம் அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**சுவரொட்டிகளை ஒட்டிய நபர் கைது – கொலன்ன தேர்தல் தொகுதி, இரத்தினபுரி**

எம்பிலிப்பிட்டிய ஜனாதிபதிக் கல்லூரி வாக்களிப்பு நிலையங்கள் (9, 10, 11) மதிற் சுவர்களில் ஐ.ம.சு.கூ வேட்பாளர் திருமதி.பவித்திரா வன்னியாராச்சியின் பரப்புரைச் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு

எம்பிலிப்பிட்டிய பொலிசினால் இன்று காலை 11 மணியளவில் ஹேவகுலவடுகே சமில் ஜானக்க எனும் நபர் கைது செய்யப்பட்டதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது.

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்களால் நுவரெலியா மாவட்டத்தின் மஸ்கெலியா கிரன்வில் தோட்டத்தில் வாக்காளர்களுக்கு மதுபானம் விநியோகம்**

வாக்காளர்கள் ஜோசப் மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையம் 182 மற்றும் 184 இல் வாக்களிப்பதற்கு முன்னதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஆதரவாளர்களினால் மதுபாவனம் விநியோகிக்கப்பட்டதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது. குற்றமிழைத்தவர்கள் இ.தொ.கா சின்னத்திற்கு வாக்களிக்கும் படியும் மற்றும் அவர்களது விருப்பு வாக்குகளை வேட்பாளர் இல 2 (ஆறுமுகம் தொண்டமான்), 9 (சிவராஜ் அனுஷா) மற்றும் 10 (சிவலிங்கம் முத்து) ஆகியோருக்கு இடும்படியும் வாக்காளர்களை ஊக்கப்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டது.

**மதவாச்சியில் தேர்தல் கண்காணிப்புக்கு இடையூறு, அநுராதபுரம்**

அநுராதபுரம் குஞ்சுத்துவா வித்தியாலய வாக்களிப்பு நிலையம் 30 இல் தே.வ.க.நி இன் தேர்தல் தினக் கண்காணிப்பாளரை அவரது பணிகளைச் செய்யவிடாது ஒரு குழுவினர், “வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியே கண்காணிப்பு செய்வதற்கு யார் அனுமதி தந்தது, நீர் யார்?, வாக்களிப்பு நிலையத்திற்குள் மாத்திரமே கண்காணிப்புப் பணிகளைச் செய்ய முடியுமென” கேள்விகள் கேட்டு இடையூறு ஏற்படுத்தியது. இந்த குழுவினர் ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு.திஸ்ஸ கரலியத்தையின் ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட LA – 9820 எனும் இலக்கம் கொண்ட வாகனத்தில் வந்தனர்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைகளுக்கெதிரான ஒரு கூட்டமைப்பு என்பவற்றால் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது, தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் மனித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் உருவகிக்கப்படுகிறது.

**தே.வ.க.நி இன் அனைத்து அறிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் என்பன ஒன்லைனில் www.cmev.org எனும் முகவரியில் அணுகமுடியும்.**



கலாநிதி.பா.சரவணமுத்து
இணை அமைப்பாளர்



திரு.உதயா கலுப்பத்திரன
இணை அமைப்பாளர்



திருவாட்டி. சீத்தா ரஞ்சனி
இணை அமைப்பாளர்